# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை 2020 - 02

சுட்டெண் : ............... தமிழ் (T–72) நேரம்:3.00 மணித்தியாலம்

பகுதி - I

**அறிவுறுத்தல்கள்** : பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடைதருக

### பகுதி I

1. **மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

I) வாரல் எம் சேரி தாரல் நின் தாரே
அலராகின்றால் பெரும காவிரிப்
பலர் ஆடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியல் அம் புகவின அம் தோட்டு வேட்டை
நிரைய ஒள்வான் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு அன்ன இவள்
பழிதீர் மாண்ணலம் தொலைதல் கண்டே.

அ) இப்பாடலில் வாயில் மறுக்கும் தோழியின் மதிநுட்பத்தை விளக்குக.
ஆ) பாடலில் இடம்பெற்றுள்ள அணியையும் குறிப்புப் பொருளையும் விளக்குக.
இ) பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.
தார், பிணித்தல், தோடு, மாண்ணலம்

II) என்புகழ்கின்றது ஏழை எயினனேன் இரவி என்பான்
தன்புகழ் கற்றை மற்றை ஒளிகளை மறைக்குமாப்போல்
மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத்து உரவுத்தோளாய்

அ) இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தை விளக்குக.
ஆ) பாடலின் பொருளை எழுதுக.
இ) உவமை அணியை விளக்குக.

2. ‘அ’ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.
அல்லது
‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

மானிடத் தன்மையைக் கொண்டு - பலர்
வையத்தை ஆள்வது நாம் கண்டதுண்டு
மானிடத் தன்மையை நம்பி - அதன்
வன்மையினாற் புவி வாழ்வு கொள் தம்பி.
மானிடம் என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைந்திட்ட உன் இருதோளும்
வானும் வசப்பட வைக்கும் - இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும். (மானிட)

மானிடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த
வையத்திலே அவன் செய்த வரைக்கும்
மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்
மானிடம் என்பது புல்லோ - அன்றி
மரக்கட்டையை குறித்திட வந்த சொல்லோ
கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு
கடலை வசப்பட செய்ததும் அதுதான். (மானிட)

மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்
மானிடம் என்பது குன்று - தனில்
வாய்த்த சமத்துவ உச்சியில் நின்று
மானிடருக் கினிதாக - இங்கு
வாய்த்த பகுத்தறிவாம் விழியாலே
வான்திசை எங்கணும் நீபார் - வாழ்வின்
வல்லமை மானிடத் தன்மை - என்றேதேர். (மானிட)

அ) மானுடசக்தியின் பெருமைகள் எவை?
ஆ) மானுடசக்தியின் பயன்கள் எவை?
இ) ‘‘மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்’’ என்ற அடிகளை விளக்குக.
ஈ) கவிஞரின் எடுத்துரைப்பு முறையை விளக்குக.

**அல்லது**

‘‘இப்போது காக்கா என்கிறேன். நாளைக்கு மச்சான் என்கிற காலமும் நேரமும் வந்துவிடவா போகிறது? நான் எவ்வளவு நல்லவளாகவும் அழகியாகவும் இருந்தாலும் நான் ஏழை, அவங்க பணக்காரர். நான் தண்ணி அவங்க எண்ணெய். ஒரு போத்தலுக்க இரண்டும் இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?

தின்ன உண்ண மட்டும் இவ்வீட்டில் ஒரு குறையும் இல்லை. இருநூறு அவணம் முன்னூறு அவணம் என்று ஒவ்வொரு வருடமும் நெல் வருது. இந்த நிலையில் சோற்றுப் பஞ்சம் இந்த வீட்டில் எப்பிடி வரும்? இருந்தும் உணவால் உடல் வளரும். மனமகிழ்வும் திருப்தியும் எப்படி வரும்? என்று நான் யோசிப்பேன். தின்பதில் குடிப்பதில் கூட நான் ஒரு வேலைக்காரியாகத்தான் நடத்தப்படுகிறேன். எனக்கு சோறு தின்ன ஒரு பீங்கான். தேநீர் குடிக்க ஒரு கோப்பை. படுக்க

ஒரு தனிப்பாய். அதற்குத் தலையணையே கிடையாது. இப்படி ஒரு நடைமுறை இந்த வீட்டில் உண்டு.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் நான் என் பீங்கானைக் கழுவி எடுத்துப் போய் என் சோத்தை வாங்கிக் கொள்ளவேண்டும். அது போல எல்லோரும் தேநீர் குடித்து முடித்ததும், நான் எனது கோப்பையைக் கழுவி எடுத்துச் செல்லவேண்டும். சிறைக்கைதிகளும் இப்படித்தான் என்று யாரோ கதைத்தார்கள். நானும் இவ்வீட்டில் ஒரு சிறைக்கைதியா? தேயிலைக்குத் தண்ணீர் வைப்பது நான். அரிசி கழுவுவது, மீன் வெட்டுவது, மரக்கறி வகை அரிவது எல்லாம் நான். உண்ணும் போதும் குடிக்கும் போதும் மட்டும் நான் இழிந்த சாதியாக எப்படி மாறுகிறேன்?

முஸ்லிம்களெல்லாம் சமமானவர்கள், சகோதரர்கள் என்று சொல்கிறார்கள். நான் மட்டும் இந்தச் சகோதரர்களில் சேரவில்லையா? என் உம்மா, ஐந்து 'வக்து'ம் ஒழுங்காகத் தொழாவிட்டாலும் நோன்பு முப்பதும் பிடிப்பா. தறாவீஹ் தொழப்போவா, ஹறாம் ஹலாலுக்கு பயந்து நடப்பா. அவ வயத்துல பிறந்து ஸல்மா என்று பெயரும் வைத்துக்கொண்ட நான் வேலைக்காரியான காரணத்தினால்தானே இழிந்தவளானேன்! என் ஆசையின்படி உடுக்கமுடியவில்லை! என் எண்ணத்தின்படி நடக்கமுடியவில்லை!

அ) வர்க்கரீதியான அடக்குமுறைகள் வெளிப்படும் விதம்.

ஆ) தான் அடக்கப்படுவதைத் தாங்கமுடியாத ஆற்றாமையும் சீற்றமும் வெளிப்படுமாற்றினை விளக்குக.

இ) "நான் ஏழை, அவங்க பணக்காரர். நான் தண்ணி அவங்க எண்ணெய். ஒரு போத்தலுக்கு இரண்டும் இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?" என்ற கூற்றை விளக்குக.

ஈ) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரைக்குக.

## பகுதி II

3. **வலியறிதல்** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு,
   (அ) வலியின் பகுதியும் பயனும்
   (ஆ) தன் வலி அறியா இடத்து ஏற்படும் இழுக்கு
   இ) மாற்றான் வலி, துணைவலி, வினை வலி அறியா இடத்து ஏற்படும் குற்றங்கள்
   (ஈ) கொடை வழங்குதல் குறித்த வலியறிதல்
   உ) இதில் அடம் பெறும் அணிகள்
   ஆகியவற்றை விளக்குக.

4. **குகப்படலத்தில்** பரதனுடைய படைகள் கங்கை ஆற்றைக்கடக்கும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு,
   அ) படகுகள் பற்றிய தோற்றம்
   ஆ) யானைப் படைகள் கடந்த தன்மை
   இ)) பெண்கள், முனிவர்கள் கடந்த தன்மை
   ஈ) இப் பகுதியில் இடம்பெறும் அணிகள்
   என்பவற்றை விளக்குக.

5. **எஸ்.பொ வின் தேர் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,**
   அ) தலைப்பின் பொருத்தப்பாடு
   ஆ) ஆறுமுகத்தாரின் குண இயல்புகள்
   இ) குமாரசாமி மீது ஆறுமுகத்தார் காட்டும் ஈடுபாடு
   ஈ) ஆசிரியரின் எடுத்துரைப்பு முறை
   ஆகியவற்றை விளக்குக.

6. **சுவாமி விபுலானந்தரின் தமிழ்த்தொண்டு** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,
   அ) தமிழ்மொழியின் பெருமைகள்
   ஆ) இயற்ற வேண்டிய தமிழ்த்தொண்டுகள்
   இ) உத்தமக்கவிகள் பற்றியும் அதில் பாரதி பற்றியும் அவரது எண்ணங்கள்
   ஈ) ஆசிரியரின் மொழிநடை

   என்பவற்றை விளக்குக.

7. **வ.அ.இராசரத்தினத்தின் ஒரு வெண்மணற்கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது** என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு,
   அ) இலட்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்த தாமோதரம்
   ஆ) நாவலில் வெளிப்படும் காத்திருப்பு
   இ) பெண் கல்வி பற்றிய சிந்தனைகள்
   ஈ) ஆசிரியரின் புனைதிறன்

   முதலானவற்றை விளக்குக.

8. **பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**
   அ) கவிஞர் **இ.முருகையனின் இருதுயரங்கள் நாடகத்தில்** கந்தப்பு மனோகரன் ஆகியோரின் துயரங்களும் துயரங்களால் உண்டான முரண்களும் வெளிப்படுமாறு
   ஆ**) அமலன் ஆதிபிரான் பதிகத்தில்** புராண இதிகாசக்கருத்துகளின் ஊடான திருமாலின் பெருமைகள்
   இ) **பாரதியார் என்ற கவிதையில்** பாரதியின் பெருமைகள்
   ஈ) **தேம்பாவணியில்** சாந்தியின் ஐயங்களும் மரியாளின் பதில்களிலும் வெளிப்படுத்தும் யேசுபாலனின் மாட்சிமைகள்